**MCOP NO. 25 /2022**
**Date 08.06.2026**
**Pw 1. பத்மாவதி**
**3ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது கணவரின் வயது மற்றும் வருமானத்தை காட்டுவதற்கான ஆவணங்கள் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கிற்காக எனது கணவரின் வயது மற்றும் வருமானத்தை மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 2, 3 மனுதாரர்கள் தற்போது என்ன செய்து வருகிறார்கள் என்றால் 2ம் மனுதாரர் வேலை செய்து வருகிறார், 3மனுதாரருக்கு திருமணம் ஆகிவிட்டது. விபத்தைப் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது கேள்விப்பட்டேன். 2ம் எதிர் மனுதாரர் விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தன் பேரில் எனது கணவர் பெயரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கணவர் மீது எந்த தவறும் இல்லை என்று சொல்லி சம்மந்தப்பட்ட குற்றவியல் நீதிமன்றத்திலோ, மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடமோ நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால் காவல் துறை கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்தேன். மேற்படி மனுவிற்கான ஆதாரத்தை நான்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு எனது கணவர் தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்து இரவு 11.00 மணியளவு என்றால் சரிதான். எனது கணவர் தான் வாகனம் வருவதை கவனிக்காமல் , சாலையை திடீரென கடக்க முயன்றதால் மேற்படி விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்து சம்மந்தமாக காவல் துறையினர் தயார் செய்த மாதிரி வரைபடம், மகஜர், குற்ற இறுதியறிக்கை எதுவும் எங்கள் பக்கம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்தது சாலையின் மையப் பகுதி என்பதால் இந்த வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் மேற்சொன்ன ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு வாகனம் ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் நஷ்ட ஈடு கிடைக்க வேண்டும் என்தற்காக கற்பனையாக மிகைப்படுத்தி நிரூபணம் வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166ன் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்பதை நிரூபிக்க வேண்டிய கடமை தங்களை சார்ந்தது என்றால் சரியல்ல. மேற்படி

லாரி ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லை என்பதால் 3ம் எதிர் மனுதாரர் எந்த நஷ்ட ஈடும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் மனுவில் கோரியுள்ள நஷ்ட ஈடு மிகவும் அதிகமானது என்றாலும், 3ம் எதிர் மனுதாரரைப் பொருத்து இந்த மனு செலவுத் தொகையுடன் தள்ளுப்படி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

Sd/–P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.